தத்தியானா மக்காரவா

வீரமான எறும்பு



தத்தியானா மக்காரவா

வீரமான எறும்பு

தேவதைக் கதை

மொழிபெயர்ப்பாளர்: பூ. சோமசுந்தரம்

திருந்திய வடிவம்: நா. முகம்மது செரீபு

ஓவியர்: கென்னாதி பவ்லீஷின்

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

ராதுகா பதிப்பகம்
மாஸ்கோ

முன்னொரு காலத்தில் ஓர் எறும்பு வாழ்ந்து வந்தது. அதன் பெயரை அறிய ஆவலாக இருப்பீர்கள். அதன் நண்பர்கள் எப்படி அழைத்தனர்? அதன் நாற்பது பெண்களும், பையன்களும், வயதான அன்புத் தாயும், பாசம் மிகுந்த மனைவியும் எப்படி அழைத்தனர்? எறும்புகளுக்கு உல கம் முழுக்க பல பெயர்கள் உண்டு. ஒரு மில்லியன் எறும்புப் பெயர்கள் எனக்குத் தெரியும். எறும்பு இலியா, எறும்பு ஸ்தெப்பான், எறும்பு இவான் ஆகியோரை எனக்குத் தெரியும். இது தவிர நிக்கலாய், அலெக்சாந்தர், கர்னேய் ஆகிய எறும்பு கள் எனது நண்பர்கள்... எல்லாப் பெயர் களையும் கூறுவது இயலுமா? என் கதாநாய கனுக்குச் சிம்யோன், அந்திரேய், மத்வேய் போன்ற பெயர் எதுவும் கிடையாது. அதை எ-றும்-பு என்றே எல்லாரும் அழைத்தனர்.

புலர்காலையில் எல்லா எறும்புகளும் தங்கள் புற்றில் மகிழ்வுடன் தூங்கிக் கொண்டிருந்தன... தூக்கத்திற்கு மத்தியில் எறும்பு சிந்தித்தது: ''நமது புற்றில் இருபது குடும்பங்கள் வாழ்கின் றன. நிக்கலாய் குடும்பத்தினர் திங்கள் கிழமை தேவதாரு ஊசி இலைகள் கொணர்ந்தனர். மாடி யில் உள்ளவர்கள் செவ்வாய்க் கிழமை உளுத்த கட்டைத் துணுக்குகளைக் கொணர்ந்தனர். யெர்ம லாய் குடும்பத்தினர் புதன் கிழமை காட்டில் வேலை செய்தனர். சன்னல்களுக்குக் கண்ணாடி வைக்க, தட்டான் பூச்சி சிறகு கொணர வியாழக் கிழமை சிம்யோன் காட்டுக்குப் போனான். வெள்ளிக் கிழமை மழை பெய்தது. ஆனாலும் யெவ்கேனி மூன்று சிம்பு கள் கொணர்ந்தான். இன்று சனிக் கிழமை. நம் முடைய முறை. படுக்கையை விட்டு எழவே மன மில்லை. ஆனால் எழுந்து ஆகவேண்டும்.'' எறும்பு துள்ளி எழுந்தது, ''எழுந்திடுவீர், குடும்பத்தினரே! கை முகம் கழுவுங்கள், குடும்பத்தினரே! காட்டுக்குப் போய் ஊசியிலை கொண்டு வருவோம்!'' என்று அவர்களை எழுப்பியது.

பகல் முழுக்க எறும்புக் குடும்பத்தினர் காட்டில் உழைத்தனர். கதிரவன் மறையும் நேரம் வீடு திரும்பலாயினர். எறும்பு ஆறு ஊசியிலைகளை இழுத்து வந்தது. அதன் மனைவி மூன்று இலைகளைக் கொணர்ந்தது. எறும்பின் மகன்கள் ஓடைக் கரையில் இரண்டு குச்சிகளைக் கண்டு எடுத்து வந்தன. எறும்பின் மகள்கள் ஆளுக்கு ஒரு சிலாம்பைச் சுமந்து வந்தன. கடைசிப் பையனும் ஓர் இலைக் காம்பைச் சுமந்தது. கடைசிப் பெண்ணும் மகரந்தத் துகளைக் கவ்வி வந்தது. அவர்கள் வந்த பாதை சோலையையும் காட்டையும் கடந்து சென்றது. ஆனால், தங்கள் இடம் போன போது புற்றைக் காணாது திகைத்தன.



''ஓ! என்ன வியப்பு... இது நமது காட்டுச் சாலைதான்... நமது காட்டோர இருப்பிடம்... அதே சிவப்புக் கசகசாச் செடிகள்... ஆனால், உயரமாக வும், விசாலமாகவும் இருந்த நம் புற்றைக் காணோ மே? இருபது பெரிய குடும்பங்கள் வாழும் அழகிய வீடு எங்கே?'' என்று கிசுகிசுத்தது எறும்பு. மனச் சோர்வினால் அரிய ஆறு ஊசியிலைகளை நழுவ விட்டது. எறும்பின் மனைவியும் திகைத்துப் போய் மூன்று ஊசியிலைகளைத் தவற விட்டது. உடல் பதறவே, எறும்பின் குழந்தைகள் கைகளை விரித் தன. இரு குச்சிகளும் தரையில் விழுந்தன. எறும்பின் மகள்கள் துயரத்தால் சுருண்டு போயின. கையி லிருந்த சிலாம்புகளை நழுவ விட்டன. கலக்கமுற்ற எறும்புக் குடும்பத்தினரின் தலைகளுக்கு மேலாக அப்போது கொசுவின் ரீங்காரம் கேட்டது.



''ஏய், அசட்டு எறும்பே! ஏன் இப்படி நிற்கிறாய்? பகல் முழுக்கக் காட்டிலே சுற்றினாய். குழந்தைகளை மனம் போல விளையாட விடாது தடுத்தாய். விளையாட்டுச் சாமான்களுக்குப் பதிலாக முட்களைச் சுமந்தனர். பாவம், உன் மனைவியைப் பார், இளைத்துப் போய் விட்டாள். மூன்று கட்டைகளைச் சுமந்த களைப்பு. கடைசிக் குழந்தை கூட பெரிய இலைக் காம்பைத் தூக்கிச் சுமந்தான்! கடைசிப் பெண்ணும் நூறு கிலோ பூந்துகளைச் சுமந்திருக்கிறாள்! இப்படி நீங்கள் உழைத்த போது, உன் எறும்புக் கூட்டம் வேறு காட்டிற்குக் குடி போய் விட்டது. உனக்கு ஒரு வார்த்தை சொல்லவில்லை. ஒரு செய்தியும் கூறவில்லை.''

ஓ, எவ்வளவு கொடுமை! அத்தனையும் பொய்! எறும்புக்கு அவை இலையில் எழுதிய கடிதம் கொசுவின் சிறகுக்கு அடியில் தான் இருந்தது.

ஐயோ, எறும்புகளே! நீங்கள் கொசுவிடம் கடிதம் கொடுத்த நேரம் சரியில்லை. கொசுக்கள் வஞ்சகமும் துரோகமும் நிறைந்தவை. தெரியாதா உங்களுக்கு! கடிதத்தை மறைத்து வைத்துக் கொண்டு, கொசு பறந்து போய் விட்டது.

எறும்பு தனிமைப்பட்டுப் போனது. நண்பர்களோ, அண்டை அயலார்களோ இல்லை. எந்தச் சுவடும் தெரியவில்லை. அவர்களிடமிருந்து ஒரு செய்தியும் இல்லை... ஐயோ, எறும்பு அகதி போல ஆனது. தனது வாழ்வில் அது ஏக்கத்தையே கண்டதில்லை. அதற்கு நேரமும் இல்லை. அதிகாலையில் விழித்து எழுவது, பரபரப்பாக அங்குமிங்கும் ஓடுவது, வெட்டுவது, இழைப்பது, சுமப்பது, தனது வேலைகளைக் குழந்தைகளுக்குக் கற்பிப்பது என வாழ்க்கையை நடத்தின... ஏங்குவதற்கு நேரமேது?



"அன்புள்ள பக்கத்து வீட்டு எறும்புக்கு! முக்கியக் காரணத்தால், நமது வீட்டை உடன் வேறு இடத்திற்கு அவசியம் மாற்ற நேரிட்டது. அவை அற்பமான, கசப்பான காரணங்கள். மிக அவசரம். நாம் சந்திக்கையில் எல்லாவற்றையும் விளக்குகிறோம். இங்கிருந்து வலப் புறம் திரும்பினால், எங்களைச் சுலபமாகக் காண்பீர்கள். முன்னூறு எறும்பு அடிகளுக்கு அப்பால் மூன்று ஆஸ்ப் மரங்கள் உள்ளன. அவை பாதி மொட்டை மரங்கள். அவற்றின் அருகே ஒரு ஃபிர் மரம் சாய்ந்து கிடக்கிறது. குழந்தைகள் கால்களில் களிம்பு ஒட்டாதபடி பார்த்துக் கொள்ளவும். சாய்ந்த மரத்திற்கு மறுபுறம் மூன்று சதுப்புத் திட்டுகளைக் கடந்தால் நமது வீட்டை அடையலாம். விரைவில் சந்திப்போம்!''

இப்போதும் எறும்புக்கு ஏங்க நேரமில்லை. இருட்டுவதற்குள்ளாகக் குடும்பத்தைத் தக்க இடத்தில் அமர்த்த வேண்டும் என நினைத்தது... மனைவியின் தோளில் தட்டி, உற்சாகமான குரலில் கூறியது: ''எதற்கும் கவலையடையாதே. எல்லாம் சரியாகி விடும். தன் குடும்பத்தை இரவில் தங்க வைக்க எறும்புக்கு முடியாது என்பது உலகிலேயே நடக்காதது! எறும்புக் குழந்தைகளுக்கான கதைகளில் கூட எறும்புகள் மனம் கலங்குவதோ, துயரப்படுவதோ ஒருபோதும் கிடையாது.''

இவ்வாறு தேறுதல் சொன்ன எறும்பு, இரவு தங்க இடந்தேடிப் புறப்பட்டது. வெட்டு மரங்கள், மேடுகள் எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்தது. எல்லாத் தண்டுகளிலும் அடி மரங்களிலும் ஏறிப் பார்த்தது. எல்லா இடமும் ஈரமாகவும், கரடுமுரடாகவும், குளிராகவும் இருந்தன. திடீரென்று ஒரு வட்டத் தகர டப்பா கண்ணிற்பட்டது. அதன் மீது வண்ணத்தாள் ஒட்டப்பட்டிருந்தது.

''ஆகா! தகரக் கூரை, சித்திர வேலை செய்த வாயில். குழந்தைகள் தங்க இதை விட நல்ல இடம் அமையாது என்று நினைக்கிறேன்.'' தானாகவே சொல்லிக் கொண்டது எறும்பு. அந்த டப்பாவில் அதன் குடும்பம் உடனே குடியேறியது. இரவை அங்கு அவை கழித்தன. காலையில் கதிரவனின் முதல் கதிர்கள் அதன் மீது பட்டு மினுமினுத்தது.

தகர டப்பா பளிச்சென்று மின்னியது. ''கதிர வனின் கதிர்கள் நம் டப்பாவைக் கண்டு மகிழ்ந்து விளையாடுகின்றன. இதை விட நல்ல இருப்பிடம் உலகத்தில் இல்லை என்பதே இதன் பொருள். இங்கிருந்து எங்கும் போக மாட்டேன்!'' என்று எறும்பு முடிவு செய்தது.

நீர்க் கீரிகள் புது அணை கட்டி, பக்கத்து மலையிலிருந்து ஓடை நீரைத் திருப்பி விட்டன. அதனால் விரைவில் வெள்ளம் வரவிருக்கிறது. எனவே குடும்பத்தைக் காப்பாற்ற விரைந்து வேறிடம் போக வேண்டும் என எறும்புக்குச் சொல்ல ஆளில்லை. இதனாலேயே அதன் நண்பர் கள் எறும்புக்காகக் காத்திராமல் புதிய இடத் துக்குப் போய் விட்டன. இது எறும்புக்குத் தெரி யாது. புது வீட்டில் குடி அமர்ந்ததில் மகிழ்ச்சி அடைந்தது. சிலந்தி வலைத் திரையை வாயிலில் மாட்டியது. பனித் துளிகள் அதன் மீது அழகாய் மினுமினுத்தன. குளிர் காலத்திலும் வெதுவெ துப்பாக இருக்கப் படுக்கைகளில் கனமான பாசி யைப் பரப்பியது. இரவில் வெளிச்சம் தெரிய விட்டத்தில் மின்மினிப்பூச்சியைப் பொருத்தியது. இதனால் எறும்பு மகிழ்ந்தது. எனவே புதுமனை புகுந்ததைக் கொண்டாடத் தீர்மானித்தது. பளபளக் கும் டப்பாவின் மீது இவ்வாறு அறிவிப்பு ஒன்றை எழுதியது.

‘‘விருந்தினர் கவனிக்க. இன்று மாலை என் வீட்டில் நடக்கும் தேநீர் விருந்திற்கு அறிந்தவர் அறியாதவர் அனைவரையும் அழைக்கிறேன். மாலை எட்டு மணிக்கு உங்கள் வருகையை எதிர்நோக்கி ஆவலோடு காத்திருப்பேன்.’’

எட்டு மணிக்குப் பூச்சிகள் சில மகிழ்வுடன் ரீங்காரம் செய்தபடி டப்பாவுக்கு வந்தன. அவை எறும்புக்கு அறிமுகமில்லாதவை. ஆனால் அழகானவை. அவை தும்பிகளும் விட்டில்களும்.

''தும்பிகளும் விட்டில்களும் மொத்தமாக எங்கே போய் விட்டன?'' என்று காட்டில் விலங்குகள் வியப்புற்றன. ''அவை வெள்ளி டப்பாவில் விருந்து கொண்டாடுகின்றன. அவற்றின் பாட்டுக்கள் வெகு தூரம் வரை கேட்கின்றன'' என்று கரிச்சான் விளக்கம் சொன்னது.

இருந்த எல்லாருக்கும்
இனியநல் ரொட்டியும்
அருந்த சுவை தேநீரும்
விருந்தாய் கிடைத்ததே.



எல்லாரும் இருக்க இடமும், தின்னப் பண்டங்களும் டப்பாவில் நிறைய இருந்தன. விருந்து நடந்த அந்நேரத்தில் எறும்பின் மூத்த மகன் சிவப்பன் உலாவச் சற்று வெளியே புறப்பட்டது... மலைத்து வாயிலில் நின்று போனது. ''எறும்புகளே! நாம் தேநீர் பருகிய வேளை தண்ணீர் பெருகி விட்டது! சுற்றிலும் வெள்ளக்காடு! ஆபத்து!'' என்று கலக்கத்துடன் சிவப்பன் அலறியது.

''வெள்ளக்காடு! ஊழி வெள்ளம்!'' என்று தும்பிகளும் விட்டில்களும் கூச்சலிட்டன. தேநீரையும் தின்பண்டங்களையும் அப்படியே போட்டு விட்டு திறந்த வாயில் வழியே பறந்து சென்றன. ஆனால், நமது எறும்போ அஞ்சவில்லை. ஆபத்தைக் கண்டு கலங்கவில்லை. வீரன், ஏக்கத்துக்கு இடந்தரவில்லை. வழமை போல அமைதியாகச் சிந்தித்தது. அதன் குடும்பம் டப்பாவோடு நீரில் மிதக்கையில் ஏங்குதற்கு நேரம் ஏது? ஏன் ஏங்க வேண்டும்? எதற்காக? மறுபடியும் காலைக் கருக்கலில் எழ வேண்டும். பாய்மரத்தில் விரைந்து ஏறி, பாய்களை இறுகக் கட்டி, எல்லாரையும் மேலே ஏறும்படி சீட்டி அடித்து அழைக்க வேண்டும். டப்பாவைக் கரைக்குச் செலுத்தி உணவுப் பண்டங்கள் சேகரிக்க வேண்டும். காட்டை ஆராய வேண்டும், எதிர்ப்படும் எறும்புகளுடன் பேச வேண்டும். அவற்றையும் படகுப் பயணத்துக்கு உடன் அழைத்துச் செல்ல வேண்டும்.



ஆற்றில், தொலை தூரத்தில் ஏதோ பளிச்சிடுவதை நீங்கள் எப்போதேனும் கண்டது உண்டா? தொலைவில் யாரோ மெல்லச் சீட்டி அடிப்பதை நீங்கள் கேட்டது இல்லையா? தொலைவில் யாரோ இப்படிப் பாடுவது போல நீங்கள் உணர்ந்தது இல்லையா?

''இன்மழலை நிறைந்த குடும்பம்
நன்மையுற வாழும் சுற்றம்
இனியபுன் புறுவலுடன் வாழ்க்கை
கனிவுடன் கடல்மேற் செல்வேன்!
வஞ்சமிலை கரைமீள ஆசையிலை!
அஞ்சாதே யாவரையும் நீந்தவைப்பேன்
வெற்றியே யன்றி வேறறியேன்
மற்றபடி நானோர் எளியேன்
என்பேர் கடல் எறும்பு
அன்பரே அறிவீர் இதை!''

Т. Макарова
ОТВАЖНЫЙ МУРАВЕЙ
На тамильском языке

T. Makarova
A BRAVE ANT
In Tamil

இரண்டாவது பதிப்பு

© தமிழ் மொழிபெயர்ப்பு, முன்னேற்றப் பதிப்பகம், 1977
சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

ISBN 5-05-001610-X